09.07.2026

O.S.NO. 278 /2022 வா.சா.1

பெயர் – பக்கிரிசாமி

<u>வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு பிரதி வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u> :–

நான் இந்த வழக்கை Authorised Signatory Nithiss Manoj Enterprises பிரதிவாதி மீது தாக்கல் செய்துள்ளேன். மலர்விழியை Authorised Signatory ஆக இந்தியன் ஆயில் கார்ப்பரேசன் நியமித்துள்ளது. அந்த அடிப்படையில் அவர்மீது வழக்கு தாக்கல் செய்துள்ளது. நான் மலர்விழிக்கு எதிராக தனிப்பட்ட முறையில் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ–1 முதல் வா.சா.ஆ–6 ஆவணங்களில் மலர்விழியானவர் Authorised Signatory Nithiss Manoj Enterprises என்று காணப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கறிஞருக்கு நான் தகவல் சொல்லித்தான் மலர்விழிக்கு அறிவிப்பு அனுப்பினார். அதில் குறிப்பிட்டுள்ள இரண்டு முகவரிகளிலும் Authorised Signatory Nithiss Manoj Enterprises என்று இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ–4 அறிவிப்பை Nithiss Manoj Enterprises உரிமையாளர் மலர்விழி என்று குறிப்பிட்டு அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். மலர்விழியை நான் முதலில் எப்போது எங்கு சந்தித்தேன் என்றால் 2019 ம் வருடம் ஜூலை முதல் வாரத்தில் அவரும் அவர் கணவரும் என்னுடைய வீட்டுக்கு வந்தார்கள். வந்து பெட்ரோல் பங்கு நடந்த முடியவில்லை, பணம் தேவைப்படுகிறது என்று சொன்னார்கள். ஏற்கனவே அறிமுகம் இல்லாத பிரதிவாதி எப்படி முதன்முதலில் 2019 ம் வருடம் ஜூலை முதல் வாரத்தில் பெட்ரோல் பங்கு நடத்துவது சம்மந்தமாக கேட்டு வீட்டுக்கு வந்தார்கள் என்றால், நான் ஏற்கனவே மூன்று வண்டிகள் வைத்து கோழி வியாபாரம் செய்து

வந்தேன். வண்டிகளுக்கு டீசல் போடும் வகையில் ஏற்கனவே அவர் பழக்கமாகும். அவரை பெட்ரோல் பங்கில் நான் பார்த்துள்ளேன். அவர்தான் பெட்ரோல் பங்கை நடத்துகிறார் என்று என்னிடம் யார் சொன்னார்கள் என்றால் அவர்தான் வீட்டுக்கு வரும்போது சொன்னார். சொத்து விபரத்தில் இந்தியன் ஆயில் என்று கூறியுள்ளேன். மலர்விழி என்பவர் இந்தியன் ஆயில் கார்ப்பரேசனின் டீசல்ஷிப் ஏஜெண்ட் என்றால் சரிதான். 18.07.2019 ம் தேதி மலர்விழியும் அவரது கணவரும் என் வீட்டுக்கு வந்தபோது அக்ரிமெண்ட் எழுதி 500 ரூபாய் தாள்களாக ரூபாய் முப்பத்தைந்து லட்சம் கொடுத்தேன். மலர்விழியிடம் கொடுத்தேன். வா.சா.ஆ-3 ஆவணம் எழுதிய அன்று மாலை 05.30 மணியளவில் எல்லாம் முடித்து பணத்தை கொடுத்தேன். வா.சா.ஆ-3 ல் உள்ளது மலர்விழியின் கையெழுத்து அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ-3 ல் நானும் கையெழுத்து போட்டுள்ளேன். கரூரில் கோர்ட்டுக்கு எதிரில் 18.07.2019 ம் தேதி காலை சுமார் 11.00 மணியளவில் நோட்டரி பப்ளிக் முன்பு கையெழுத்து செய்தேன். கையெழுத்து வாங்கி வந்து கடைசியாக பணம் கொடுத்தேன். காலை 11.00 மணிக்கு கையெழுத்து போடும்போது பணம் கொடுக்கவில்லை. நோட்டரி பப்ளிக் மற்றும் சாட்சிகளுக்கு நான் பணம் கொடுத்த விபரம் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. சாட்சிகளில் ஒருவர் ரத்தினகிரி என்பவர் குளித்தலையை சேர்ந்தவர். பக்கத்தில் கூட்டுர் தேவநாயக்கன்பட்டியில் தோட்டம் போட்டிருநதார். மற்றொரு சாட்சி சரவணன் சாமியடி புதூரை சேர்ந்தவர். அவர்கள் எப்போது கையெழுத்து செய்தார்கள் என்றால் என்னுடன் காரில் வக்கீல்

ஆபிசுக்கு வந்தார்கள். கையெழுத்து செய்தார்கள். நான் கூறுவதுபோன்று ரூபாய் முப்பத்தைந்து லட்சத்தை மலர்விழியிடம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் அவருக்கு தனிப்பட்ட முறையிலோ அல்லது Authorised Signatory Nithiss Manoj Enterprises என்ற வகைக்கோ கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கறிஞர் அறிவிப்பிலும் வா.சா.ஆ-3 ல் ஒப்பந்த காலம் 3 ஆண்டுகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஒப்பந்த காலம் 2022 ம் ஆண்டில் முடிகிறது. 3 ஆண்டுகளுக்குள் ஒப்பந்தத்தை ரத்து செய்யலாம் என்று அதில் ஷரத்து கூறப்படவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் சமரசம் செய்து கொள்வதற்கு சமரச மையத்தில் மனு செய்தேன். அதுபற்றி வழக்கில் கூறியுள்ளேன். இந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டுள்ளேன். என்றால் என்னுடைய பணம் வேண்டும் என்று கேட்டுள்ளேன். வா.சா.ஆ-3 ல் 3 ஆண்டு காலத்திற்கு பின்னர் நான் விலகிக்கொள்ள வேண்டும் என்று ஒரு ஷரத்து உள்ளது என்றால் சரிதான். 3 ஆண்டுகாலம் முடிந்தபின்னர்தான் பணத்தை கேட்க முடியும் என்று அதில் கண்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ-3 ல் குறிப்பிட்டுள்ள 3 ஆண்டு காலம் முடிவதற்கு முன்பே இந்த வழக்கு தாக்கல் செய்து விட்டேன் என்றால் சரிதான். வாடகை பணம் எதுவும் நான் செலுத்தவில்லை. ஒட்டன்சத்திரம் சார்பு நீதிமன்றத்தில் மலர்விழிக்கு எதிராக தனிப்பட்ட முறையில் அ.வ.எண். 1406/2022 வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கை 15 செண்டு நிலம் சம்மந்தமாக தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ-3 ஒப்பந்தத்திற்கு பின்பு 6 மாதத்தில் எதுவும் ஓட்டமுடியவில்லை அதனால் அவரிடம் ஒப்படைத்துவிட்டு வெளியில் வந்துவிட்டேன். Nithiss Manoj Enterprises ல் நான் பங்குதாரர் இல்லை. Nithiss Manoj Enterprises வங்கி

கணக்கிலிருந்துதான் இந்தியன் ஆயில் கார்ப்பரேசனுக்கு பணம் செலுத்த முடியும் என்றால் சரிதான். அந்த வங்கி கணக்கை Operate செய்வதற்கு எனக்கு மலர்விழி அதிகார ஆவணம் எழுதிக்கொடுக்கவில்லை. மலர்விழி கொடுக்கும் காசோலைகளை வங்கியில் செலுத்துவேன் என்று சாட்சி தானாக கூறுகிறார். நான் மலர்விழியின் மேனேஜர் அல்லது வேலையாள் கிடையாது என்றால் சரிதான். லோடு எடுப்பது மற்றும் கொடுப்பதை டீலர்தான் செய்ய முடியும் என்றால் சரிதான். தனிப்பட்ட முறையில் ஒரு டீலர் நிர்வாகத்தை மற்றொரு நபரிடம் கொடுக்க முடியாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ 1, 2 படிவங்களை வா.சா.ஆ-3 தேதியில் பிரதிவாதி கொடுத்தார். ரூ.21,22,300/-ஐ தொழில் செய்வதற்காக நான் செலவு செய்வதாக ஒப்புக்கொண்டதாக வழக்கறிஞர் அறிவிப்பில் நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இந்த விபரத்தை நான் பிராதில் கூறுவில்லை என்றால் சரியல்ல. லாபத்தில் 50 சதவீதத்தை நானும் மலர்விழியும் பிரித்து எடுத்துக்கொள்வது என்று ஒப்பந்தம் ஏற்படுத்தியதாக வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். லாபத்தில் பிரித்துக்கொண்டதாக ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பிரிக்கமுடியவில்லை. ஆரம்பம் முதல் மலர்விழிதான் பெட்ரோல் பங்க் நடத்தி வருகிறார் என்றால் எனக்கு முன்பு 3,4 பேர்கள் நடத்தியுள்ளார்கள். பிராதில் பிரதிவாதி அத்துமீறி வந்தார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதியின் பெட்ரோல் பங்க் நிர்வாகத்தில் அவர் அத்துமீறி வருவதற்கு வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோன்று வா.சா.ஆ-3 ஒப்பந்தத்தை பிரதிவாதி எழுதி தரவில்லை என்றும், அதில் உள்ளது பிரதிவாதியின் கையெழுத்து

அல்ல என்றால் சரியல்ல. நான் கூறுவதுபோன்று நோட்டரி பப்ளிக் முன்பு பிரதிவாதி முன்பு கையெழுத்து செய்திருந்தால் அவர் பராமரிக்கும் பதிவேட்டிலும் பிரதிவாதி கையெழுத்து செய்திருப்பார் என்றும், பிரதிவாதி அவ்வாறு கையெழுத்து செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ 3 ஆவணம் என்னால் தயார்செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ-3 வாடகை ஒப்பந்தமாகவோ, அல்லது பங்குதாரர் ஒப்பந்தமாகவோ, அல்லது வேறு எந்த வகை ஒப்பந்தமாகவோ ஆவணமாகவோ சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ-3 ல் கீழ்க்கண்ட சொத்து விபரம் என்று குறிப்பிட்டு சொத்துக்கள் பற்றிய விபரம் கூறப்படவில்லை என்றால் சரியல்ல. உண்மையில் நான் கூறுவதுபோன்று பணம் கொடுத்து ஒப்பந்தம் ஏற்பட்டிருந்தால் பங்குதாரர் ஒப்பந்தம்தான் ஏற்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. அசையா சொத்தை பொறுத்து ஒப்பந்தம் செய்திருந்தால் கட்டாயம் பதிவு செய்திருக்க வேண்டும் என்றும், அவ்வாறு எந்த ஒப்பந்தமும் செய்யாமல் நானாக ஒப்பந்தத்தை தயாரித்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ-3 ஆவணத்திற்கும் நான் வழககு தாக்கல் செய்துள்ள Nithiss Manoj Enterprises நிறுவனத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதியின் மீதுள்ள தனிப்பட்ட விரோதம் காரணமாக தவறான ஆவணத்தை தயாரித்து வழக்குதாக்கல் செய்துள்ளேன் என்றும், வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை

PADMANABAN VENKATASAMY

Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.07.09 16:52:42 +0530

Principal District Judge,
Dindigul.